செ.வெ.எண்: 48 நாள்:25.01.2018

**அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (25.01.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 954 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டில் இம்மாதம் இது நாள் வரை 25.78 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு தேவையான 1128 மெ.டன் யூரியா, 704 மெ.டன் டி.ஏ.பி, 642 மெ.டன் பொட்டாஷ் மற்றும் 767 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது.

இதுவரை சான்று பெற்ற நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் மூலம் 244 மெ.டன், தனியார் விதை விற்பனை மையங்கள் மூலம் 98 மெ.டன் என கூடுதலாக 342 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் 11 மெ.டன் மற்றும் தனியார் கடைகளில் 4 மெ.டன் ஆக மொத்தம் 15 மெ.டன் நெல் விதைகள் கையிருப்பில் உள்ளது.

**ராபி பருவ பயிர்களுக்கான பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் 2017-18** - பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளிலிருந்து பாதுகாப்பாகவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதை ஊக்குவிக்கவும், 2017-18-ம் ஆண்டில் அரியலூர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் கீழ்க்கண்ட வேளாண்மை பயிர்களுக்கு பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்ய அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், நெல்-3 / நவரை / கோடை நெல் பயிருக்கு 1 ஏக்கருக்கு ரூ.402 பிரிமியம்தொகை, மக்காச்சோளம் பயிருக்கு 1 ஏக்கருக்கு ரூ.276 பிரிமியம்தொகை, உளுந்து பயிருக்கு 1 ஏக்கருக்கு ரூ.195 பிரிமியம்தொகை, நிலக்கடலை பயிருக்கு 1 ஏக்கருக்கு ரூ.340 பிரிமியம்தொகை, சோளம் பயிருக்கு 1 ஏக்கருக்கு ரூ.140 பிரிமியம்தொகை, எள் பயிருக்கு 1 ஏக்கருக்கு ரூ.174 பிரிமியம்தொகை ஆகியவைக்கு காப்பீடு செய்ய கடைசி நாள் 15.02.2018. பருத்தி 1 ஏக்கருக்கு ரூ.1128 பிரிமியம்தொகை, காப்பீடு செய்ய கடைசி நாள் 28.02.2018. கரும்பு 1 ஏக்கருக்கு ரூ.1450 பிரிமியம்தொகை, காப்பீடு செய்ய கடைசி நாள் 31.10.2018 ஆகும்.

இத்திட்டத்தின்கீழ், கடன் பெறும் விவசாயிகள் வங்கிகளில் / தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் கட்டாயமாகப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்யப்படுவர். கடன்பெறா விவசாயிகள், அரியலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்தும் காப்பீட்டு நிறுவனத்தின் (AICIL) அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவோ, வங்கிகள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், பொது சேவை மையங்கள் (CSC) மூலமாகவோ தங்களது விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம்.

பயிர் காப்பீட்டுத் தொகையில், விவசாயிகள் 1.5 சதவீதம் மட்டும் காப்பீட்டுக் கட்டணமாக செலுத்தினால் போதுமானது. விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம்,கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் (Bank Pass Book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar Card) நகல் ஆகியவற்றை இணைத்து, கட்டணத் தொகையை செலுத்தியபின் அதற்கான இரசீதையும் பொதுச் சேவை மையங்கள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே விவசாயிகள் இறுதி நேர நெரிசலை தவிர்க்கவும், விவசாயிகளின் விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும், பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டுத் தொகை செலுத்தி தங்களது பயிர்களை முன்கூட்டியே பதிவு செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், இணை இயக்குநர் (வேளாண்மை) சு.அய்யாசாமி, இணைப்பதிவாளர் (கூட்டுறவுசங்கங்கள்) இரா.தயாளன், மண்டல இணை இயக்குநர் (கால்நடைப்பராமரிப்புத்துறை) மு.நஸீர், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) அன்புராஜன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், ஏராளமான விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.